செ.வெ.எண்: 467 நாள்: 25.08.2021

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**
**தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் வழங்கும் முகாம்கள் நடைபெற உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மற்றும் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டை சார்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தை சார்ந்தவர்கள், சிறுபான்மையினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு பல்வகை கடன் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு 2021-2022ம் நிதியாண்டிற்கு பிற்படுத்தப்பட்டோரா் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.1 கோடியும், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் ரூ.2.05 கோடியும் இலக்கு நிர்ணயம் செய்யயப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களான தனிநபர் கடன் திட்டம், சுய உதவி குழுக்களுக்கான சிறு தொழில் கடன் திட்டம், கல்விக் கடன் திட்டம், கறவை மாடு கடனுதவி, கைவினைக் கலைஞர்களுக்கான கடன் ஆகிய திட்டங்களுக்கான கடன் வழங்கும் சிறப்பு முகாம்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் இலுப்பூர், விராலிமலை, திருமயம் - (அரிமளம்), அறந்தாங்கி, ஆவுடையார்கோவில் வட்டங்களில் 26.08.22021 காலை 11.00 மணிக்கும், கந்தர்வகோட்டை, ஆலங்குடி-(கீரமங்கலம்), அறந்தாங்கி - (சுப்பிரமணியபுரம்), திருமயம் ஆகிய வட்டங்களில் 27.8.2021 காலை 11.00 மணிக்கும் கடன் வழங்கும் முகாம் (லோன் மேளா) நடைபெற உள்ளது.

31.8.2021 காலை 11.00 மணிக்கு மணமேல்குடி, குழிபிறை, அண்டக்குளம், புதுக்கோட்டை (மகளிர் கிளை), கல்லூர்ஆகிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி கிளைகளிலும் 01.09.2021 காலை 11.00 மணிக்கு திருக்கோகர்ணம், மீமிசல், வடகாடு, அன்னவாசல், மாத்துர், கோட்டைப்பட்டிணம் ஆகிய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக் கிளைகளிலும் கடன் வழங்கும் முகாம் (லோன் மேளா) நடைபெற உள்ளது.

எனவே, இம்மாவட்டத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்கள், சிறுபான்மையினர்கள் (கிறித்துவ, இஸ்லாமிய, சீக்கிய புத்த, பார்சி மற்றும் ஜெயின்) மேற்படி சிறப்பு முகாம்களில் கலந்து கொண்டு கடன் விண்ணப்பங்களை பெற்று அதனை பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கடன் மனுக்களுடன் சார்ந்துள்ள மதத்திற்கான சான்று, ஆதார் அட்டை, வருமானச் சான்று, உணவு பங்கீடு அட்டை அல்லது இருப்பிடச் சான்று, கடன் பெறும் தொழில் குறித்த விவரம்/திட்ட அறிக்கை, மற்றும் கூட்டுறவு வங்கி கோரும் இதர ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கல்விக் கடனுக்கு விண்ணப்பிக்கும் போது பள்ளி மாற்றுச் சான்றிதழ், உண்மைச் சான்றிதழ் (Bonafide Certificate), கல்விக் கட்டணங்கள் செலுத்திய இரசீது/ செலான் (original) மற்றும் மதிப்பெண் சான்றிதழ் ஆகிய ஆவணங்களின் ஒளிப்பட நகல்களையும் சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் கூடுதல் கட்டிடம் முதல் தளத்தில் இயங்கும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.

இச்சிறப்பு முகாம்களில் கலந்து கொண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவர்கள் சிறுபான்மையின மக்கள் பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**